பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**11 06 2026** **7 15**

வியாழக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

**1.** வளர்ச்சியடைந்த இந்தியா என்ற கனவை நனவாக்க அனைவரின் பங்களிப்பும் அவசியம் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கேட்டுக்கொண்டுள்ளார்.

**2.** பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையின் கீழ் நாடு வளர்ச்சியடைந்த இந்தியா என்ற தொலைநோக்குப் பார்வையில் முன்னேறிக்கொண்டிருப்பதாக பிஜேபி தலைவர் திரு. நிதின் நபின் கூறியுள்ளார்.

**3.** இந்தியா - பல்கேரியா இடையேயான இருதரப்பு உறவு குறித்து பல்கேரிய பிரதமர் திரு. **Ruman Radev** உடன் வெளியுறவு அமைச்சர் திரு. ஜெய்சங்கர் பேச்சு நடத்தினார்.

**4.** அமெரிக்காவில் தங்கள் குழந்தைகளை பிரசவித்து, குடியுரிமை பெற அந்நாட்டிற்கு சென்ற ஐரோப்பா, ஆப்பிரிக்காவை சேர்ந்த நூற்றுக்கணக்கானோரின் விசாக்களை அமெரிக்கா ரத்து செய்துள்ளது.

**5.** ஆஸ்திரேலிய ஓபன் பேட்மிண்டன் போட்டியின் மகளிர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்றில் இந்தியாவின் பி.வி. சிந்து, மற்றொரு இந்திய வீராங்கனை இஷாராணி பருவாவை இன்று எதிர்கொள்கிறார்.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

நாட்டின் **140** கோடி மக்களின் விருப்பங்கள் நிச்சயம் நிறைவேற்றப்படும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

புதுதில்லியில் நேற்று நடைபெற்ற தேசிய ஜனநாயக கூட்டணியின் மாநாட்டில் உரையாற்றிய அவர், இக்கூட்டணி நாட்டின் நம்பிக்கையை என்றும் வலுப்படுத்தியுள்ளதாக தெரிவித்தார்.

ஒரு அரசு சரியான நோக்கத்துடன் நடைபெறும்போது வளர்ச்சியும் அதிவிரைவாக நடைபெறும் என்பதை நாட்டு மக்கள் முதல் முறையாக கண்டுள்ளதாகத் தெரிவித்தார்.

கடந்த **12** ஆண்டுகளில் **25** கோடிக்கும் மேற்பட்ட மக்கள் வறுமையில் இருந்து விடுபட்டுள்ளதன் மூலம் அரசின் கொள்கைகள் சரியானது என்பது பிரதிபலிப்பதாக தெரிவித்தார்.

**2014**ஆம் ஆண்டுக்கு முந்தைய **10** ஆண்டுகளில் நிலையற்ற தன்மையால் நாடு பெரும் பாதிப்புக்குள்ளானதாக அவர் கூறினார்.

தற்போது மக்கள் ஒரு நிலையான அரசின் செயல்பாட்டைக் கண்டு அதனைப் பாராட்டுவதாகத் தெரிவித்தார்.

தேசிய ஜனநாயக கூட்டணி அரசு, மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல், புதிய வாய்ப்புகளை உருவாக்குதல்

ஆகியவற்றின் மூலம் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவதாக அவர் கூறினார்.

எரிசக்தி துறை குறித்து குறிப்பிட்ட பிரதமர், 500 ஜிகாவாட் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி இலக்கை விரைவில் அடைய வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

சூரியசக்தி விரைவாக வளர்ச்சியடைந்து வருவதாகவும், அணுசக்தியிலும் முயற்சிகளை விரைவுபடுத்த வேண்டும் என்றும் அவர் கூறினார்.

பசுமை ஹைட்ரஜன், பசுமை அமோனியாவில் இந்தியா பெரும் முன்னேற்றம் அடைந்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

இது உலகளாவிய பசுமை எரிசக்தி மாற்றத்தில் நாட்டை முன்னோடியாக வைக்கச் செய்யும் என்று அவர் கூறினார்.

வளர்ச்சியடைந்த இந்தியா என்ற கனவு நாட்டின் அனைவரது கனவாகவும், தீர்மானமாகவும் மாறியுள்ளது என்று குறிப்பிட்ட பிரதமர், இந்த கனவை நிறைவேற்றுவதற்காக ஒவ்வொருவரும், ஒவ்வொரு தருணத்தையும் அர்ப்பணிக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

அரசின் பொருளாதார மற்றும் கட்டமைப்பு சீர்திருத்தங்கள், அரசியல் நிர்ப்பந்தத்தால் அல்லாமல், சித்தாந்தத்தின் அடிப்படையில் ஏற்படும் விளைவு என்று கூறினார்.

உலகின் முக்கிய நாடுகள் பொருளாதார ரீதியாக இடர்பாடுகளை எதிர்கொண்டிருக்கும் நிலையில் இந்தியா கடந்த நிதியாண்டில் 7 புள்ளி 7 சதவீத வளர்ச்சியை எட்டியதாக தெரிவித்தார்.

பலவீனமான 5 நாடுகள் பட்டியலில் இருந்து இந்தியா விடுபட்டு, தற்போது உலகில் விரைவாக வளரும் பொருளாதார நாடாக மாறியுள்ளது என்று திரு. நரேந்திர மோடி தெரிவித்தார்.

<<<<>>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையின் கீழ் நாடு வளர்ச்சியடைந்த இந்தியா என்ற தொலைநோக்குப் பார்வையை ஒட்டி முன்னேறிக் கொண்டிருப்பதாக பிஜேபி தலைவர் திரு. நிதின் நபின் கூறியுள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற தேசிய ஜனநாயக கூட்டணி மாநாட்டில் உரையாற்றிய அவர், தங்கள் கூட்டணி 22 மாநிலங்களில் ஆட்சியில் உள்ளதாக கூறினார்.

இந்த மாநிலங்கள் மொத்த நிலப்பரப்பில் சுமார் 75 சதவீதத்தைக் கொண்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

நாட்டில் 10 மாநிலங்களில் பழங்குடியினர் பெரும்பான்மையாக வசிப்பதாகவும், அதில் 7 மாநிலங்களில் பிஜேபியும், தேசிய ஜனநாயக கூட்டணியும் ஆட்சிபுரிவதாக அவர் கூறினார்.

நாட்டின் வளர்ச்சியில் தங்கள் கூட்டணி கவனம் செலுத்துவதை இந்த சாதனை பிரதிபலிப்பதாக திரு. நிதின் நபின் தெரிவித்தார்.

<<<<>>>>

நீண்டகாலம் தொடர்ச்சியாக பணியாற்றி வரும் பிரதமர் என்ற சாதனை படைத்துள்ள பிரதமர் திரு. நரேந்திர மோடிக்கு உலக தலைவர்கள் பலர் தொடர்ந்து வாழ்த்து தெரிவித்து வருகின்றனர்.

அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில், பிரதமர் திரு. நரேந்திர மோடி சிறந்தவர் என்றும், வலிமை மிக்க ஞானமுடையவர் என்றும் கூறியுள்ளார்.

ரஷ்ய செய்தித்தொடர்பாளர் திரு. திமித்ரி பேஸ்கோ கூறியபோது இருதரப்பு வளர்ச்சிக்கு திரு. நரேந்திர மோடி தொடர்ந்து பங்களிப்பார் என்ற ரஷ்யா நம்புவதாக தெரிவித்துள்ளார்.

ஐரோப்பிய ஆணைய தலைவர் **Ursula Von Der Leyen,** ஜெர்மனி பிரதமர் **Friedrich Merz,** இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு, கனடா பிரதமர் **Mark Carney,** பிரிட்டன் முன்னாள் பிரதமர் **Rishi Sunak** உள்ளிட்ட தலைவர்களும் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

வாழ்த்து தெரிவித்த அனைத்து உலக தலைவர்களுக்கும் பிரதமர் திரு. நரேந்திர மோடி நன்றி தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

பல்கேரியாவின் சோஃபியா நகரில் அந்நாட்டுப் பிரதமர் திரு. **Ruman Radev**-ஐ வெளியுறவு அமைச்சர் திரு. ஜெய்சங்கர் நேற்று சந்தித்து இருதரப்பு பேச்சு நடத்தினார்.

இதுகுறித்து சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள அவர், வர்த்தகம் மற்றும் முதலீடு, மருந்து உற்பத்தி, செமிகண்டக்டர், செயற்கை நுண்ணறிவு, விண்வெளி, பாதுகாப்பு, சுற்றுலா, பொழுதுபோக்குத் துறை உள்ளிட்டவற்றில் இரு நாடுகளுக்கு இடையேயான ஒருங்கிணைப்பு குறித்து விவாதித்ததாக அவர் கூறியுள்ளார்.

தமது பல்கேரிய பயணத்தை முடித்துக்கொண்டு ஃபின்லாந்து சென்றுள்ள திரு. ஜெய்சங்கர், இன்று அங்கு நடைபெறும் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்க உள்ளார்.

<<<<>>>>

மேற்குவங்கத்தில் முதலீடு செய்வது தொடர்பாக இந்திய வர்த்தக சபை பிரதிநிதிகள் மத்திய இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங்கை சந்தித்துப் பேசினர்.

அம்மாநிலத்தில் தங்கள் நிறுவனங்கள் மூலம் ஒரு லட்சம் கோடி ரூபாய்க்கும் மேலான முதலீடுகளை ஈர்ப்பதற்கான பணிகளை மேற்கொண்டு வருவதாக தெரிவித்தனர்.

மாநிலத்தின் பொருளாதார சாத்தியக்கூறுகள் மீதான நம்பிக்கையின் காரணமாக தொழில்துறையினர் முதலீடு செய்ய விரும்புவதாக அவர்கள் டாக்டர் ஜிதேந்திர சிங்கிடம் கூறினார்கள்.

<<<<>>>>

இந்தியாவில் இருந்து மாம்பழங்களை இறக்குமதி செய்வதற்கு நேபாள அரசு எந்தவித தடையும் விதிக்கவில்லை என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக ஊடகங்களில் வெளியான செய்திகள் தவறானது என்று மத்திய வேளாண் மற்றும் விவசாயிகள் நல அமைச்சகம் கூறியுள்ளது.

இந்தியாவில் இருந்து மாம்பழங்களைத் தொடர்ந்து இறக்குமதி செய்வதை நேபாள அரசு உறுதி செய்துள்ளதாக தெரிவித்துள்ளது.

எந்தவித இடையூறுமின்றி நேபாளத்திற்கு மாம்பழம் ஏற்றுமதி செய்யப்பட்டு வருவதாகவும் அமைச்சகம் கூறியுள்ளது.

இறக்குமதி செய்யப்படும் மாம்பழங்களின் தன்மை குறித்து நேபாளம் அண்மையில் விதித்துள்ள நிபந்தனைகளின்படி இந்தியா ஏற்றுமதி செய்து வருவதாகவும் மத்திய வேளாண் அமைச்சகம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

அமெரிக்க ராணுவம் ஈரான் மீது நேற்று மீண்டும் தாக்குதல் நடத்தியுள்ளது.

பஹ்ரைன், குவைத், ஜோர்டான் நாடுகளில் உள்ள அமெரிக்க ராணுவத்தினர் மீது ஈரான் தாக்குதல் நடத்தியதையடுத்து, தாங்கள் இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதாக அமெரிக்கா கூறியுள்ளது.

இதற்கிடையே அமெரிக்காவின் அழுத்தத்திற்கு பணிந்து ஈரான் பேச்சுவார்த்தையில் ஈடுபடாது என்று ஐ.நா.வுக்கான ஈரான் தூதர் தெரிவித்துள்ளார்.

ஹோர்முஸ் நீரிணைப் பகுதியில் அனைத்து வகை கப்பல் போக்குவரத்திற்கும் தடை செய்யப்பட்டுள்ளதாக ஈரான் கூறியுள்ள நிலையில் அதற்கு அமெரிக்கா மறுப்பு தெரிவித்துள்ளது.

<<<<>>>>

அமெரிக்காவில் தங்கள் குழந்தைகளை பிரசவித்து, குடியுரிமை பெற அந்நாட்டிற்கு சென்ற ஐரோப்பா, ஆப்பிரிக்காவை சேர்ந்த நூற்றுக்கணக்கானோரின் விசாக்களை அமெரிக்கா ரத்து செய்துள்ளது.

அமெரிக்க குடியுரிமையை சட்டவிரோதமாக பெறுவதை தடுக்கும் நோக்கில் அந்நாடு இந்நடவடிக்கையை எடுத்துள்ளது.

ஐரோப்பா, மேற்கு மற்றும் வடக்கு ஆப்பிரிக்காவில் உள்ள சில நிறுவனங்கள் சட்டவிரோதமாக அமெரிக்கா செல்வதற்கு விசாக்களை பெற்றுத்தர உதவுவதைக் கண்டறிந்து அந்த நிறுவனங்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து வடக்கு ஆப்பிரிக்காவில் வழங்கப்பட்ட 100 விசா உரிமங்களை அந்நாட்டில் உள்ள அமெரிக்க தூதரகம் ரத்து செய்துள்ளது.

<<<<>>>>

அருணாச்சரப்பிரதேசம், அசாம், மேகாலயா, ஒடிசா, சிக்கிம், கேரளா மாநிலங்களின் சில பகுதிகளில் இன்று கனமழை பெய்ய வாய்ப்பிருப்பதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

அந்தமான் நிகோபார் தீவுகள், பிஹார், ஆந்திரப்பிரதேசம் மற்றும் கர்நாடகாவின் கடலோரப் பகுதிகளில் மழை பெய்யக்கூடும் என்று கூறியுள்ளது.

<<<<>>>>

ஆஸ்திரேலிய ஓபன் பேட்மிண்டன் போட்டியின் மகளிர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்றில் இந்தியாவின் பி.வி. சிந்து, மற்றொரு இந்திய வீராங்கனை இஷாராணி பரூவாவை இன்று எதிர்கொள்கிறார்.

மற்றொரு போட்டியில் தன்வீ ஷர்மா - மால்விகா பன்சோட்டை எதிர்கொள்கிறார்.

--------------

உலகக் கோப்பை கால்பந்துப் போட்டி இந்திய நேரப்படி இன்று நள்ளிரவு மணி 12.30க்கு தொடங்குகிறது.

மெக்சிகோ சிட்டியில் நடைபெற உள்ள முதல் ஆட்டத்தில் மெக்சிகோ அணி - தென்னாப்பிரிக்க அணியை எதிர்கொள்கிறது.

அமெரிக்கா, மெக்சிகோ, கனடாவில் போட்டிகள் நடைபெற உள்ளன. மொத்தம் 48 அணிகள் இதில் பங்கேற்கின்றன.

-------------

உலகக் கோப்பை மகளிர் ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டிக்கான பயிற்சி ஆட்டத்தில் இங்கிலாந்து அணி 5 ரன் வித்தியாசத்தில் இந்திய அணியை வென்றது.

**<<<<The end>>>>**